**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் புரட்டாசித் திங்கள் 15 ம் நாள்

**<u>I.A.No.339/2023</u>**

**in**

**<u>OS.No.77/2020</u>**

1. தனலெட்சுமி
2. குமார்
3. செல்வராஜ்
4. செல்வராணி .... மனுதாரர்கள்/வாதிகள்

**// எதிர்//**

1. விமலா
2. சிநேகா (மேஜர்)
3. பிரீதா (மேஜர்)
4. தசா (மைனர்)
5. மாயகிருஷ்ணன்
6. சார்பதிவாளர், மன்னார்குடி
7. மாவட்ட ஆட்சியர், திருவாரூர். .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.தினகரன், B.A., B.L., அவர்களும், 5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ராமகிருஷ்ணன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும்,

## உத்தரவு

இம்மனுவில் 2, 3 பிரதிவாதிகள் மேஜராகிவிட்டதால் அவர்களின் கார்டியனாக இருக்கும் 1ம் பிரதிவாதியை அப்பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டு (Exonerate) 2, 3 பிரதிவாதிகளை நேரில் ஆஜராகி வழக்கை மேல் நடத்தும்படி அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் இம்மனுவில் 3ம் மனுதாரர் ஆவார். இவ்வழக்கில் சினேகா, பிரீதா ஆகிய இருவரும் 2 , 3 ம் பிரதிவாதிகளாக (இளவர்களாக) சேர்க்கப்பட்டுள்ளார். மேற்கண்ட மைனர் 2 , 3 ம் பிரதிவாதிகளாக வழக்கு வியாஜ்ஜியம் செய்வதற்கு இதுநாள் வரையில் அவர்களது தாயாரும், இயற்கை காப்பாளருமான விமாலா பொறுப்பேற்று நடத்த வேண்டியிருந்தது.

தற்போது 2, 3ம் பிரதிவாதிகள் 18 வயது பூர்த்தியாகி மேஜராகிவிட்டார்கள். அதன் காரணமாக 2, 3ம் பிரதிவாதிகளின் கார்டியனாக இருந்து வரும் 1ம் பிரதிவாதியை நீக்கிவிட்டு 2, 3ம் பிரதிவாதிகளை நேரில் ஆஜராகி இவ்வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை. 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் அழைப்பாணை அனுப்பபட்டு முன்னிலையாகாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 5ம் பிரதிவாதி தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ளனர்.

4) **இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

5) **<u>தீர்வு</u> :-**

**1.** மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, நிரூபண வாக்குமூலம், மற்றும் வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பட்டு அவருக்கு சார்வு ஆகவில்லை என்பதால் தினசரி நாளிதழில் விளம்பரம் கொடுக்கப்பட்டு கடந்த 15.09.2023 அன்று 1ம் பிரதிவாதி முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 2, 3ம் எதிர்மனுதாரர்கள் மேஜராகிவிட்டதால் அவரது கார்டியனாக இருக்கும் 1ம் எதிர்மனுதாரரை நீக்கிவிட்டு 2, 3ம் பிரதிவாதிகளை நேரில் ஆஜராகி வழக்கை மேல் நடத்தக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலினைக்கப்பட்டது. 2, 3ம் பிரதிவாதிகள் மேஜராகிவிட்டதால் அவர்களை இந்த வழக்கில் முன்னிலையாகி வழக்கை மேல் நடத்த உத்தரவிட இருதரப்பினருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே 2, 3ம் பிரதிவாதிகளாக இருந்த 1ம் எதிர்மனுதாரரை நீக்கம் செய்து மேற்கண்ட நபர்கள் நேரில் ஆஜராகி வழக்கை நடத்துவதற்கு உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

6) முடிவில், இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (01.10.2024) அவையறியப் பகரப்பட்டது.

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.10.04 16:35:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.10.04 16:35:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.